SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

மாலை எக்ஸ்பிரஸ்
MAALAI EXPRESS
மாநிலம் பயனுற!
குரோதி வருடம் ஐப்பசி 26
ஹிஜிரி 1446 ஜமாதுல் அல்வல் 9


மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

● புதுச்சேரி ● செவ்வாய்க்கிழமை, நவம்பர் 12, 2024 ● வெளியூர்: 13-11-2024, புதன்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 125 ● 6 பக்கம் ● ரூ.6

## 7 நாட்களுக்கு கனமழை

# தமிழகம் நோக்கி நகர்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி

## முன்னெச்சரிக்கை நடவடிக்கை தீவிரம்




**சென்னை, நவ. 12-**

தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் நிலவிய, வளிமண்டல கீழடுக்கு சுழற்சியானது, நேற்று மதியம் வலுப்பெற்று, அதே பகுதியில் காற்றழுத்த தாழ்வு பகுதியாக உருவானது. இந்த காற்றழுத்த தாழ்வு பகுதி தற்போது மத்திய மேற்கு வங்கக்கடல், வட தமிழகத்தை நோக்கி நகர்ந்துள்ளது . வட தமிழகம், தெற்கு ஆந்திர கடற்பகுதியில் தற்போது காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி நிலவுகிறது.

இதன் காரணமாக, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ,செங்கல்பட்டு மாவட்டங்களில் தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருகிறது. சென்னையில் கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக மடிப்பாக்கத்தில் 6.6 செ.மீட்டர் மழைப் பதிவாகி உள்ளது.

இந்த நிலையில், தமிழகத்தில் அடுத்த 7 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. தமிழகத்தில் ஒருசில இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், தமிழகம் முழுவதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தப் பட்டுள்ளது

## மாநகராட்சி கட்டுப்பாட்டு மையத்தில் துணை முதலமைச்சர் ஆய்வு




**சென்னை, நவ. 12-**

தென்மேற்கு வங்கக்கடலில் நேற்று உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி மேற்கு நோக்கி நகர்ந்த நிலையில் தமிழகத்தை நெருங்கியது. காற்றழுத்த தாழ்வு பகுதி வட தமிழகம் மற்றும் தெற்கு ஆந்திரா கடற்கரையை ஒட்டியுள்ளது.

இதையொட்டி நேற்று இரவு முதல் தொடர்ந்து சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது.

இந்நிலையில் சென்னையில் தொடர் மழை பெய்து வரும் நிலையில் ரிப்பன் மாளிகையில் உள்ள அவசரகால கட்டுப்பாட்டு மையத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார்.

துணை முதலமைச்சர் ஆய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, ஆணையாளர் குமரகுருபரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளிடம் அவர் கேட்டறிந்தார். இதையடுத்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

* மழையை ஒட்டி சென்னை மாநகராட்சி சார்பில் 329 முகாம்கள் தனியார் மையங்கள் தயார் நிலையில் உள்ளன.

* அமைச்சர்கள், மேயர், மக்கள் பிரதிநிதிகள் களத்தில் உள்ளனர்.

* மழை நீரை அகற்ற மின் மோட்டார்கள் தயார் நிலையில் உள்ளன என்று கூறினார்.

## உடன்குடி: மாணவிகளுக்கு பாலியல் தொல்லை- பள்ளி முதல்வர் கைது

**தூத்துக்குடி, நவ. 12-**

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் சல்மா என்ற பெயரில் தனியார் மேல்நிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக உடன்குடி பகுதியைச் சேர்ந்த பொன்சிங் பணியாற்றி வந்தார். கடந்த மாதம் 22ந் தேதி தூத்துக்குடியில் விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. இதில் பங்கேற்பதற்காக பள்ளி மாணவமாணவிகளை உடற்கல்வி ஆசிரியர் பொன்சிங் அழைத்து சென்றார்.

அங்கு முதல் நாள் போட்டி முடியாததால் மறுநாள் போட்டி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இதையடுத்து மாணவ மாணவிகள், உடற்கல்வி ஆசிரியர் ஆகியோர் இரவில் தூத்துக்குடியில் உள்ள ஒரு தங்கும் விடுதியில் அறை எடுத்து தங்கினார்கள். அப்போது, பொன்சிங், மாணவிகள் சிலரிடம் மது குடியுங்கள் என்று வற்புறுத்தியும், ஆபாசமாக இரட்டை அர்த்தத்தில் பேசி பாலியல் தொல்லை கொடுத்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த விவகாரம் நேற்று விஸ்வரூபம் எடுத்தது. அதாவது, பாதிக்கப்பட்ட மாணவிகள் தங்களது பெற்றோரிடம் இதுதொடர்பாக கூறினார்கள். இதனால் அதிர்ச்சி அடைந்த அவர்கள் தங்களது உறவினர்களுடன் பள்ளிக்கு திரண்டு வந்து முற்றுகையிட்டனர்.

இது குறித்து தகவல் அறிந்த குழந்தைகள் நல அலுவலர் அலெக்ஸ், தனியார் பள்ளிகளின் மாவட்ட கல்வி அதிகாரி சிதம்பரநாதன், திருச்செந்தூர் உதவி போலீஸ் சூப்பிரண்டு வசந்தராஜ், தாசில்தார் பாலசுந்தரம், குலசேகரன்பட்டினம் போலீஸ் இன்ஸ்பெக்டர் கண்ணன் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். அங்கு போலீசார் குவிக்கப்பட்டனர். அவர்கள் பள்ளி நிர்வாகம், பெற்றோரிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். மாணவிகளிடமும் விசாரணை மேற்கொண்டனர்.

பள்ளி நிர்வாகம் சார்பில் சம்பந்தப்பட்ட ஆசிரியரை வேலையில் இருந்து நீக்கிவிட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதுதொடர்பாக துணை சூப்பிரண்டிடம், பெற்றோர்கள் புகார் செய்தனர். அதன்பேரில் திருச்செந்தூர் அனைத்து மகளிர் போலீசார் இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எடுக்கப்படும் என்று தெரிவித்தனர்.

இதற்கிடையே, கோவையில் பதுங்கி இருந்த உடற்கல்வி ஆசிரியர் பொன்சிங்கை போலீசார் நேற்று இரவில் கைது செய்தனர். அவரை திருச்செந்தூருக்கு அழைத்து வந்தனர். அவரிடம் விசாரணை நடத்திய பிறகே இந்த சம்பவத்தில் அவர் மட்டும் ஈடுபட்டாரா? அல்லது வேறு யாருக்கேனும் தொடர்பு உள்ளதா? என்பது குறித்து தெரியவரும் என்று போலீசார் தெரிவித்தனர்.

இந்த நிலையில், உடன்குடியில் பள்ளி மாணவிகளுக்கு உடற்கல்வி ஆசிரியர் பாலியல் தொல்லை கொடுத்த விவகாரம் தொடர்பாக சம்பந்தப்பட்ட பள்ளியின் முதல்வர் சுவீட்லி, செயலாளர் செய்யது அகமது ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரிடம் திருச்செந்தூர் மகளிர் காவல் நிலையத்தில் வைத்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கர்நாடகாவில் 3 சட்டமன்ற தொகுதிகளில் நாளை ஓட்டுப்பதிவு

**பெங்களூரு, நவ. 12-**

கர்நாடக சட்டசபையில் சென்னபட்டணா, சிக்காவி, சண்டூர் ஆகிய 3 தொகுதிகள் காலியாக உள்ளன. இந்த 3 தொகுதிகளுக்கு நாளை இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

சென்னபட்டணாவில் பா.ஜ.க கூட்டணியில் ஜனதா தளம் (எஸ்) சார்பில் முன்னாள் பிரதமர் தேவேகவுடாவின் பேரனும், மத்திய மந்திரி குமாரசாமியின் மகனுமான நிகில் குமாரசாமி, காங்கிரஸ் சார்பில் முன்னாள் மந்திரி யோகேஷ்வர், சிக்காவியில் பா.ஜ.க. சார்பில் முன்னாள் முதல்மந்திரி பசவராஜ் பொம்மையின் மகன் பரத் பொம்மை, காங்கிரஸ் சார்பில் யாசிர் அகமதுகான் பதான், சண்டூரில் காங்கிரஸ் சார்பில் துகாராம் எம்.பி.யின் மனைவி அன்னபூர்ணா துகாராம், பா.ஜ.க. சார்பில் பங்காரு ஹனுமந்து ஆகியோர் உள்பட 45 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

3 தொகுதிகளிலும் சேர்த்து 7 லட்சத்து 4 ஆயிரத்து 673 வாக்காளர்கள் வாக்களிக்க வசதியாக 557 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த தேர்தலில் பதிவாகும் வாக்குகள் வருகிற 23ந் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

## காணை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார் மாவட்ட ஆட்சியர்



விழுப்புரம் சென்னையில் தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் விழுப்புரம் மாவட்டம் காணை ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடம் ரூ.366.25 மதிப்பீட்டு கட்டி முடிக்கப்பட்டு கட்டிடத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து காணை ஊராட்சி ஒன்றிய அலுவலத்தில் நடைபெற்ற விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் சி.பழனி தலைமையில், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா. லட்சுமணன் ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி வைத்து அலுவலகப் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தனர். உடன் கூடுதல் ஆட்சியர் ஸ்ருதன்ஜெய்நாராயணன், ஜனகராஜ், சேர்மன் தமிழ்ச்செல்வி, மாவட்ட கவுன்சிலர் சிவக்குமார் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## ராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டம்: போலீசாருடன் தள்ளுமுள்ளு



**ராமேசுவரம், நவ. 12-**

ராமேசுவரத்தில் இருந்து கடந்த 9ந் தேதி 3 விசைப்படகுகளில் 23 மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க சென்றிருந்தனர். அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர், எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி 23 மீனவர்களையும் நடுக்கடலில் சிறைபிடித்து கைது செய்தனர். அதோடு 3 படகுகளையும் பறிமுதல் செய்தனர். 23 பேரிடமும் தீவிர விசாரணை நடத்தினர். இதையடுத்து 23 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் நேற்று யாழ்ப்பாணம் ஊர்க்காவல்துறை கோர்ட்டில் ஆஜர்படுத்தினர். அப்போது நீதிபதி, 23 மீனவர்களையும் வருகிற 25ந்தேதி வரை சிறையில் அடைக்க உத்தரவிட்டார். இதை தொடர்ந்து 23 மீனவர்களும் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த நிலையில், பருத்தித்துறை அருகே எல்லை தாண்டி மீன்பிடித்ததாக ராமேசுவரத்தைச் சேர்ந்த மீனவர்கள் 12 பேரை இலங்கை கடற்படை சிறைபிடித்துள்ளது. மேலும் ஒரு விசைப்படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட மீனவர்களை இலங்கையின் காங்கேசன் துறை முகாமிற்கு அழைத்து செல்லப்பட்டனர். அங்கு மீனவர்களிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

அடுத்தடுத்து மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்டுள்ள சம்பவம் ராமேசுவரம் மீனவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில் மீனவர்கள் கைதை கண்டித்து பாம்பன் சாலை பாலத்தில் விசைப்படகு மீனவர்கள் மறியல் போராட்டம் நடத்தி வருகின்றனர். இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் படகுகளை உடனடியாக விடுவிக்கக்கோரி மீனவர்கள் மறியல் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களை போலீசார் தடுத்து நிறுத்தியதால் மீனவர்கள், போலீசார் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

# மாவட்ட அளவிலான கலைத்திருவிழா போட்டி



**கடலூர், நவ. 12-**

கடலூர், சி.கே.மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கலைத்திருவிழா போட்டியை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் ஐயப்பன் முன்னிலையில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது, மாணவர்களின் கலைதிறன்களை வெளிக்கொணரும் விதமாக 6 முதல் 12ஆம் வகுப்புவரை பயிலும் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளின் கலைத்திறனை வெளிப்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, கடந்த இரண்டு ஆண்டுகளாக வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் கலைத்திருவிழா போட்டிகள் நடைபெற்று வருகிறது.

2023–2024 ஆம் கல்வி ஆண்டில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பள்ளி, வட்டாரம். மாவட்டம் மற்றும் மாநில அளவில் கலைத்திருவிழா போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மாநில அளவில் கலையரசன், கலையரசி பட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இக்கல்வியாண்டு முதல் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்புவரை பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளும் மற்றும் மாற்றுத்திறன் மாணவ, மாணவிகளும் பங்கேற்கும் வகையில் கலைத்திருவிழா போட்டிகள் நடைபெறுகிறது.

அதன்தொடர்ச்சியாக, கடலூர் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கும் தனித்தனியே கலைத்திருவிழா போட்டிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மாணவ, மாணவிகளின் கலைத்திறனை வெளிக்கொணரும் விதமாக கலைத்திருவிழா போட்டிகளில் 1மற்றும் 2 ஆம்வகுப்புவரை 5 போட்டிகள், 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை8 போட்டிகள், 6 முதல் 8 ஆம் வகுப்புவரை 11போட்டிகள், 9 மற்றும் 10 ஆம்வகுப்புவரை30 போட்டிகள், 11மற்றும் 12 ஆம் வகுப்பு வரை 30 போட்டிகள் என கவின்கலை, நுண்கலை, இசை (வாய்ப்பாட்டு), கருவி இசைதோற் கருவி, கருவி இசைதுளை காற்றுக்கருவிகள், கருவி இசை தந்திக்கருவிகள், நடனம், நாடகம் உட்பட மொத்தம் 84 வகையான போட்டிகள் 5 பிரிவுகளில் நடத்தப்படுகின்றன.

பல்வேறு போட்டிகளில் பங்கேற்பதற்காக 3,19,452 மாணவ, மாணவிகள் பதிவு செய்தனர். அதனைத்தொடர்ந்து, பள்ளி அளவில் 58,303 மாணவ, மாணவிகள் தேர்வு பெற்றனர். குறுவட்ட அளவில் நடைபெற்ற போட்டிகளில் 8,589 மாணவ, மாணவிகள் தேர்வுபெற்றனர். தற்போது மாவட்ட அளவில் 2,863 மாணவ, மாணவிகள் போட்டியாளர்களாக பங்கேற்க உள்ளனர். இப்போட்டிகளில் வெற்றிபெறுபவர்கள் மாநில அளவிலான போட்டிக்கு தகுதிபெறுவார்கள். மாணவ, மாணவிகள் தங்களது முழுத்திறனை வெளிப்படுத்தி வெற்றிபெற்று மாவட்டத்திற்கும், பள்ளிக்கும் பெருமை சேர்த்திடவேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் சுந்தரிராஜா, மாநகராட்சி துணை மேயர் தாமரைச்செல்வன், மாநகராட்சி ஆணையாளர் அனு, முதன்மைக்கல்வி அலுவலர் எல்லப்பன், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி உதவித்திட்ட அலுவலர் சிங்காரவேல், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் நாகராஜ பூபதி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



**சேலம், நவ. 12-**

சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது. பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும், அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்திடவும், பெண்களின் முன்னேற்றத்திற்கு தேவையான நடவடிக்கைகள் உள்ளிட்ட பணிகளில் அரசு அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமெனவும், குறிப்பாக பொதுமக்கள் ஒருமுறை வழங்கிய மனுக்கள் மீண்டும் வராத வகையில் மனுவின் மீது உரிய தீர்வு வழங்கப்படுவதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டுமென அறிவுறுத்தப் பட்டுள்ளது.

அதனடிப்படையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித்தொகை, இலவச வீட்டுமனைப்பட்டா, பட்டா மாறுதல், சாதிச்சான்று, வேலைவாய்ப்பு, வங்கிக்கடன்கள், கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி, மாற்றுத்திறனாளி களுக்கான உதவித்தொகை, உதவி உபகரணங்கள், குடிநீர் வசதி, சாலை வசதி உட்பட அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் 264 மனுக்கள் வரப்பெற்றன. மேலும், மாற்றுத்திறனாளிகள் எவ்வித சிரமமும் இன்றி மனுக்களை வழங்கும் வகையில் மாவட்ட ஆட்சியரகத்தின் தரை தளத்தில் மாற்றுத்திறனாளி களுக்கென நடத்தப்பட்டு வரும் குறைதீர் முகாமில் வீட்டுமனைப் பட்டா, உதவி உபகரணங்கள், பராமரிப்பு உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து அளிக்கப்பட்ட 7 மனுக்களைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட் டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மேனகா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்கள்) சிவசுப்பிரமணியன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.இரா. முருகன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) மயில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் மகிழ்நன் உள்ளிட்ட அரசுத்துறை முதன்மை அலுவலர்கள் கரகலந்துொண்டனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# கல்வி தகுதிக்கான தேர்வு



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் பாஸ்கர பாண்டியன் துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், சாணானந்தல் ஊராட்சியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் புதிய பாரத எழுத்தறிவு திட்டம் 2024 -25ன்கீழ் கல்வி கற்காத நபர்களுக்கு தன்னார்வலர்களை கொண்டு அடிப்படை எழுத்தறிவு பயிற்றுவிக்கப்பட்டு, கல்வி தகுதிக்கான தேர்வு நடைபெற்றதை நேரில் சென்று பார்வையிட்டார்கள்.

# இயற்கை மரணம் அடைந்த தூய்மைப் பணியாளர்களின் வாரிசுக்கு நிதி உதவித்தொகைக்கான காசேலை வழங்கல்



மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தாட்கோ சார்பில் தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் கீழ் இயற்கை மரணம் அடைந்த தூய்மைப்பணியாளர்களின் வாரிசுக்கு நிதி உதவித்தொகைக்கான காசேலையை வழங்கினார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன் உள்ளார்.

# “மக்களைத்தேடி மாநகராட்சி” சிறப்பு முகாம்



கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு எண்.10க்குட்பட்ட சரவணம்பட்டி காளப்பட்டி சாலை, எஸ்.எம்.எஸ். மஹால் திருமண மண்டபத்தில், “மக்களைத்தேடி மாநகராட்சி” சிறப்பு முகாம், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் முன்னிலையில் மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. உடன் வடக்கு மண்டல குழுத்தலைவர் வே.கதிர்வேல், மாநகர தலைமைப்பொறியாளர் (பொ) முருகேசன், உதவி ஆணையர் ஸ்ரீதேவி, மாமன்ற உறுப்பினர்கள், நகர்நல அலுவலர் மரு.ஏ.மோகன், உதவி செயற்பொறியாளர் எழில், உதவி நகர திட்டமிடுநர் சத்யா மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# நல வாரிய உறுப்பினர் அட்டை வழங்கல்



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பில், 10 நபர்களுக்கு சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர் அட்டைகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ. ராஜராஜன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜி.அமீர்பாஷா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# "மக்களைத்தேடி மாநகராட்சி" சிறப்பு முகாம்



**கோவை, நவ. 12-**

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு எண்.10க்குட்பட்ட சரவணம்பட்டி காளப்பட்டி சாலை, எஸ்.எம்.எஸ். மஹால் திருமண மண்டபத்தில், "மக்களைத்தேடி மாநகராட்சி" சிறப்பு முகாம் மாநகராட்சி ஆணையாளர் ம.சிவகுரு பிரபாகரன், முன்னிலையில் மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. மாநகராட்சியின் சேவைகளை பொதுமக்கள் விரைவாக பெறும் வகையில் வடக்கு மண்டலம், 20 வார்டுகளுக்குட்பட்ட பொதுமக்கள் பயன்பெறும் வகையில் வருவாய் பிரிவின் சார்பில், சொத்துவரி மற்றும் காலியிட பெயர் மாற்றம், காலியிட வரி விதிப்பு, வரி குறித்து அனைத்து வித திருத்தங்கள், வரி புத்தக விநியோகம். புதிய கட்டிட வரி விதிப்பு. பயன்பாடு மாற்றம். பொறியியல் பிரிவின் சார்பில், புதிய குடிநீர் இணைப்பு மற்றும் குடிநீர் தொடர்பான புகார்கள், தெரு விளக்கு அமைத்தல் மற்றும் பராமரித்தல், மழைநீர் வடிகால் மண் அகற்றுதல், சாலை வசதி மற்றும் சாலைகள் பராமரிப்பு பணிகள், மாநகராட்சி பள்ளிகள் பராமரிப்பு, பொது சுகாதாரப் பிரிவின் சார்பில், பிறப்பு, இறப்பு சான்றிதழ் வழங்குதல் மற்றும் திருத்தம் செய்தல், குப்பை அகற்றுதல், மழைநீர் வடிகால் தூய்மைபடுத்துதல், உள்ளிட்ட அனைத்து வகையான சேவைகள் தொடர்பான அனைத்து மனுக்களும் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டது.

மேலும், இன்றைய தினம் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டு ஆணைகளும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்வின் போது, வடக்கு மண்டலத் தலைவர் வே.கதிர்வேல், மாநகர தலைமைப்பொறியாளர் (பொ) முருகேசன், நகர்நல அலுவலர் மரு.ஏ.மோகன், உதவி ஆணையர் .ஸ்ரீதேவி, மாமன்ற உறுப்பினர்கள். மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மாணவர் உதவி மையம் துவக்கவிழா



**சிதம்பரம், நவ. 12-**

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழக அரசின் உயர்கல்விதுறை அறிவுறுத்தலின்படி மாணவர் உதவி மையம் பல்கலைக்கழக நிர்வாக அலுவலகத்தின் சாஸ்த்திரி அரங்கின் முன் பல்கலைக்கழக துணைவேந்தர் முதுமுனைவர் பேராசிரியர் இராம.கதிரேசன் துவக்கி வைத்தார். இவ்உதவிமையமானது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மூலம் நடத்தப்படும் அனைத்து பாடப்பிரிவுகள் தொடர்பாகவும் மற்றும் தொலை நிலைகல்வியில் கல்வி பயின்று முடித்தவர்களின் சான்றிதழ் பெறுவது சம்மந்தமாகவும், உதவி செய்வதற்காகவும், இம்மையம் துவக்கப்பட்டுள்ளது. இவ்விழாவிற்கு பல்கலைக்கழக பதிவாளர் (பொ) பேராசிரியர் முனைவர் எம்.பிரகாஷ், தலைமை தாங்கினார். தேர்வுக் கட்டுப்பாட்டு அதிகாரி முனைவர் இரா.சே.குமார், புல முதல்வர்கள், துறைத் தலைவர்கள், இயக்குநர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள், துணைவேந்தரின் நேர்முக உதவியாளர் முனைவர் யி.பி.பாக்யராஜ், மக்கள் தொடர்பு அதிகாரி க. ரெத்தினசம்பத் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பள்ளி திறப்பு விழா



**கோவை, நவ. 12-**

கோவை கவுண்டம் பாளையம் குடியிருப்பு பகுதியில் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி உள்ளது. இங்கு தமிழ் மற்றும் ஆங்கில வழியில் 413 மாணவ மாணவியர்கள் படித்து வருகின்றனர். இப்பள்ளியை மார்ட்டின் குழுமம் தத்தெடுத்து தனியார் பள்ளிகளை மிஞ்சும் வகையில் 7 கோடி ரூபாய் செலவில் புனரமைத்தும் புதிய வகுப்பறைகள், கழிப்பறைகள், நூலகம், ஸ்மார்ட் வகுப்பறைகள், நுழைவு வாயில், விளையாட்டு மைதானம், கலையரங்கம் உள்ளிட்டவைகளை கட்டி தந்துள்ளனர். மேலும் பள்ளி வளாகங்களில் சிசிடிவி வகுப்பறைகளில் மேசை நாற்காலிகள், கணிணி அறை, சுற்றிலும் மரக்கன்றுகள் என பல்வேறு வசதிகளை செய்தனர். பள்ளியின் திறப்பு விழா மார்ட்டின் குழுமங்களின் இயக்குனர் லீமா ரோஸ் மார்ட்டின் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு திறந்து வைத்து வகுப்பறைகளை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் பாடி மாநகர காவல் ஆணையர் பாலகிருஷ்ணன் கோவை மாநகர மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன் மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன் மாட்டின் குழும நிர்வாக இயக்குனர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் திரைப்பட நடிகர் ஆரி மற்றும் அரசு அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ராஜராஜ சோழன் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



மாமன்னர் ராஜராஜ சோழரின் 1039 ஆவது சதய விழா கொண்டாடப்பட்டது. சிவசேனா கட்சியின் மாநில துணை தலைவர் பூக்கடை ஆனந்த் ஜி, அகில பாரத இந்து மகா சபா கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் அ.மகேஷ் ஜி, சிவசேனா கட்சியின் மண்டல தலைவர் உதயகுமார் ஜி, மாவட்ட அமைப்பாளர் சுதர்சன் ஜி, நிகழ்ச்சியில் பங்கேற்று ராஜராஜ சோழன் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

# முதல் உலகப்போரின் 106வது நினைவுநாள் நிகழ்ச்சி



**காரைக்கால், நவ. 12-**

காரைக்கால் கலெக்டர் அலுவலகம் எதிரே உள்ள பிரஞ்சு வீரர்கள் நினைவுத்தூணில் முதல் உலகப்போரின் 106வது நினைவுநாள் நிகழ்ச்சி நேற்று காலை நடைபெற்றது.

காரைக்காலில் ஓய்வுபெற்ற பிரஞ்சு இராணுவ வீரர்கள் சங்கம் சார்பில், முதல் உலகப்போரின் 106 ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. காரைக்கால் கலெக்டர் அலுவலகம் எதிரில் உள்ள பிரஞ்சு போர் வீரர் நினைவுத்தூணில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, காரைக்கால் மாவட்ட துணை கலெக்டர் செந்தில்நாதன் மற்றும் ஏராளமான பிரஞ்சு குடியிரிமைபெற்ற பிரஞ்சு மக்கள் கலந்துகொண்டு போர்வீரர் சிலையின் கீழே மலர் வளையம் வைத்து மரியாதை செய்தனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை காரைக்கால் ஓய்வுபெற்ற பிரஞ்சு இராணுவ வீரர்கள் சங்கத்தினர் சிறப்பாக செய்திருந்தனர். முன்னதாக, பிரஞ்சு விரர் சிலை முன்பு, உலகப்போரில் உயிர் நீத்த இராணுவ வீரர்களின் நினைவாக பிராத்தனையும், பிரஞ்சு கொடி ஊர்வலமும் நடைபெற்றது.

# மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் டாக்டர்கள் பணி: புறக்கணிப்பு போராட்டம்

**தஞ்சாவூர், நவ.12-**

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் தாலுக்கா மரத்துறையைச் சேர்ந்தவர் முருகேசன். இவரது மனைவி சிவரஞ்சனி (வயது 28) என்பவருக்கு மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் பிறந்த ஆண் குழந்தை சுயநினைவின்றி இருந்தது.

இதனால் சிதம்பரம் மருத்துவக் கல்லூரி



மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்ட நிலையில் குழந்தை உயிரிழந்தது. மருத்துவர்களின் தவறான சிகிச்சையால் தான் குழந்தை இறந்தது என்று கூறி பெற்றோர், உறவினர்கள் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் போராட்டம் நடத்தினர்.

இதைத் தொடர்ந்து பெற்றோர் உறவினர்களிடம் மாவட்ட சுகாதாரப் பணிகள் இணை இயக்குனர் பானுமதி விசாரணை நடத்தினார். பின்னர் விசாரணையின் அடிப்படையில் பிரசவம் பார்த்த டாக்டர் ரம்யாவை தற்காலிக பணிநீக்கம் செய்து உத்தரவிட்டார்.

டாக்டர்களிடம் உரிய விசாரணை செய்யாமல் பெற்றோர்கள் உறவினர்களிடம் விசாரணை செய்ததன் அடிப்படையில் டாக்டர் ரம்யா தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டதை கண்டித்து இன்று மயிலாடுதுறையில் புறநோயாளிகள் பிரிவு சிகிச்சையை டாக்டர்கள் புறக்கணித்து போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இதில் 21 டாக்டர்கள் பணி புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் டாக்டர் பணியிடை நீக்கத்தை ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தினர்.

மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் உள்ள அனைத்து அவசர சிகிச்சை பிரிவுகள் இயங்கி வருகிறது. ஆனால் புறநோயாளிகள் பிரிவில் மருத்துவம் பார்ப்பதற்காக நோயாளிகளுக்கு டோக்கன் வழங்கப்பட்ட நிலையில் காலை 7:00 மணி முதல் தற்போது வரை நோயாளிகள் காத்து கிடைக்கின்றனர்.

மேலும் சிகிச்சைக்கு வந்த முதியவர்கள் என ஏராளமானோர் டாக்டர்கள் இல்லாததால் திரும்பி வேறு மருத்துவமனைக்கு செல்கின்றனர். இதனால் அங்கு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அசம்பாவிதங்களை தடுக்கும் பொருட்டு மயிலாடுதுறை போலீஸ் இன்ஸ்பெக்டர் சிவகுமார் தலையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுப்பட்டுள்ளனர்.

# நெக்ஸ்ட் ஜென் கேரியர் புதிய ஆய்வகம் திறப்பு விழா




**கோவை, நவ. 12-**

கோவை ஈச்சனாரியில் உள்ள இரத்தினம் கல்லூரியில் நவீன காலத்திற்கு ஏற்ப ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சர்வதேச தரத்தில் பயிற்சி அளித்திட நவீன தொழில் நுட்பங்களுடன் கூடிய நெக்ஸ்ட் ஜென் கேரியர் எனும் புதிய ஆய்வகம் திறப்பு விழா ரத்தினம் கல்வி குழுமங்களின் தலைவர் முனைவர் மதன் ஆ.செந்தில் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பன்னாட்டு நிறுவனமான சிகிச்சின் தலைமை செயல் அதிகாரி கிறிஸ்டோபர் கியர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஆய்வு கூடத்தை திறந்துவைத்தார். இது குறித்து இரத்தினம் இரத்தினம் கல்விக் குழுமங்களின் தலைவர் கூறுகையில் இன்றைய நவீன காலகட்டத்திற்கு தேவையான துறை சார்ந்த அறிவையும், திறன்களையும் திறம்பட அளித்து அவர்களை வழியில் வெற்றிபெற வைக்கிறது. அந்த வகையில் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் சர்வதேச தரத்தில் பயிற்சி அளித்திட நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய நெக்ஸ்ட் ஜென் கேரியர் என்ற ஒரு பெயரில் புதிய ஆய்வக அமைப்பை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

இந்நிகழ்ச்சியில் இரத்தினம் கல்விக் குழுமங்களின் இயக்குனர் சீமா செந்தில், இரத்தினம் கல்விக் குழுமங்களின் செயல் அதிகாரி முனைவர்.ஆர்.மாணிக்கம், இரத்தினம் கல்விக் குழுமங்களின் தலைமை வணிக அதிகாரி முனைவர். பா.நாகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் மாணவ மாணவியர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீ திரிசூலத்தம்மன் கோவிலில் திருவிளக்கு பூஜை



**மதுரை, நவ, 12**

மதுரை பிபி குளம் முல்லை நகர் இந்திராநகர் 3 வது தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ திரிசூலத்தம்மன் திருக்கோவில் 8ம் ஆண்டு வருடாபிஷேக விழா மூன்று நாட்கள் நடைபெற்று வருகிறது. 2ம் நாள் நிகழ்ச்சியாக உலக நன்மை வேண்டியும் கல்வி பெருக வேண்டியும் விவசாயம் செழிக்கவும் திருவிளக்கு பூஜை நடைபெற்றது.


இத்திருவிளக்கு பூஜையில் அப்பகுதியை சேர்ந்த பெண்கள் பலர் கலந்து கொண்டு திருவிளக்கு ஏற்றி அம்மனை பக்தி பரவசத்துடன் தரிசனம் செய்தனர். திருவிளக்கு பூஜையை முன்னிட்டு அம்மனுக்கு விசேஷ அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகளும் தீபாரதனைகளும் நடைபெற்றன. வருடாபிஷேக விழா ஏற்பாடுகளை விழா கமிட்டினர் சிறப்பாக செய்துஇருந்தனர்.

# வைகை அணையில் இருந்து திறக்கும் தண்ணீரின் அளவு அதிகரிப்பு

**ஆண்டிபட்டி, நவ. 12-**

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள 71 அடி உயரமுள்ள வைகை அணையில் இருந்து சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் பூர்வீக பாசன நிலங்களுக்காக நேற்று முன்தினம் வினாடிக்கு 3 ஆயிரம் கன அடி வீதம் ஆற்றின் வழியாக தண்ணீர் திறக்கப்பட்டது.

இந்த தண்ணீரின் அளவு மேலும் அதிகரிக்கப்பட்டு இன்று காலை முதல் 3151 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அணையின் நீர்மட்டம் 65



அடியை கடந்த நிலையில் முழு கொள்ளளவை நெருங்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் கூடுதல் தண்ணீர் திறப்பு காரணமாகவும், மழை முற்றிலும் நின்று விட்ட காரணத்தாலும் நீர்மட்டம் வேகமாக சரிந்து வருகிறது. தற்போது அணையின் நீர்மட்டம் 63.65 அடியாக உள்ளது. நீர் வரத்து 1125 கன அடியாக உள்ளது. நீர் இருப்பு 4337 மி.கன அடி.

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 124.20 அடியாக உள்ளது. நீர் வரத்து 648 கன அடி. திறப்பு 1107 கன அடி. இருப்பு 3460 மி.கன அடி. மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 55 அடி. வரத்து 76 கன அடி. திறப்பு 100 கன அடி. சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 126.28 அடி. வரத்து மற்றும் திறப்பு 42.14 கன அடி. இருப்பு 100 மி.கன அடி.

சண்முகாநதி அணை நீர் மட்டம் 52.50 அடி. இருப்பு 79.57 மி.கன அடியாக உள்ளது. பெரியாறு அணையின் நீர் பிடிப்பு பகுதியில் மட்டும் 31 மி.மீ மழை அளவு பதிவாகியுள்ளது. மற்ற இடங்களில் மழை இல்லை.

# புதுவை சபாநாயகர் செல்வம் மணிவிழா பிரதமர், மத்திய அமைச்சர்கள், முதலமைச்சர் ரங்கசாமி, முக்கிய பிரமுகர்கள் வாழ்த்து



**புதுச்சேரி, நவ. 12–**

புதுச்சேரி மாநிலம் மற்றும் மணவெளி சட்டமன்ற தொகுதியில் சபாநாயகர் செல்வம் மணிவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

புதுச்சேரி சட்டப் பேரவை தலைவர் செல்வம், பிறந்த நாளை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி மின்னஞ்சல் மூலம் வாழ்த்து செய்தி அனுப்பி இருந்தார்.

மேலும், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, பாராளுமன்ற சபாநாயகர் ஓம் பிர்லா, மத்திய அமைச்சரும் பாஜக தேசிய தலைவருமான ஜே.பி.நாட்டா, மத்திய அமைச்சர்கள் நிர்மலா சீதாராமன், எல்.முருகன், அர்ஜுன் ராம் மேக்வால், பாஜக தேசிய செயலாளர் தருண் கோகாய் ஆகியோரும் சட்டப்பேரவைத் தலைவருக்கு மின்னஞ்சல் மூலம் பிறந்தநாள் வாழ்த்து செய்தி அனுப்பி இருந்தனர்.

முதலமைச்சர் ரங்கசாமி, சட்டப்பேரவை தலைவர் இல்லத்திற்கு நேரில் வந்து பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்து ஆசிர்வதித்தார். துணை நிலை ஆளுநர் கைலாஷ் நாதன், தொலைபேசி மூலம் பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தார். மேலும், அமைச்சர் பெருமக்கள், சட்டப் பேரவை துணைத் தலைவர் ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் காவல் துறை உயர் அதிகாரிகள், அரசுத் துறை அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோரும் சட்டப் பேரவை தலை வருக்கு நேரில் பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

சட்டப்பேரவை தலைவர் செல்வம் பிறந்தநாளை முன்னிட்டு வீராம் பட்டினம் அருள்மிகு செங்கழுநீர் அம்மன் ஆலயத்தில் சிறப்பு பூஜை மற்றும் அருள்மிகு ஸ்ரீ மணக்குள விநாயகர் ஆலயத்தில் சிறப்பு பூஜை மற்றும் தங்கத்தேர் நிகழ்ச்சி நடைபெற்றது. சட்டப்பேரவை தலைவர் செல்வம், கோயில் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார். மேலும், தனது இல்லத்தில் துப்புரவு பணியாளர்களுக்கு இலவச சேலைகள் இனிப்புகளை வழங்கினார்.

உப்பளம் சட்டமன்ற தொகுதி பாஜக சார்பாக பொதுமக்களுக்கு இலவச வேட்டி, சேலை மற்றும் மதிய உணவு வழங்கப் பட்டது. லாஸ்பேட்டையில் உள்ள மகாத்மா காந்தி முதியோர் இல்லத்தில் காலை உணவு வழங்கப் பட்டது.

மணவெளி, பூரணாங் குப்பம், புதுக்குப்பம், நல்லவாடு, ஆண்டியார் பாளையம், தானம்பாளையம், தவளக்குப்பம், அபிஷேகப்பாக்கம், டி.என். பாளையம், நோணாங் குப்பம், டோல்கேட் ஆகிய பகுதிகளில் பொதுமக்களுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப் பட்டு மதிய உணவு வழங்கப்பட்டது.

# மீனவர்களுக்கு மழைக்கால நிவாரணம் ரூ.5.79 கோடி வழங்கும் பணி

## முதலமைச்சர் ரங்கசாமி துவக்கி வைத்தார்




**புதுச்சேரி, நவ. 12–**

புதுச்சேரி மீனவர்களுக்கு மழைக்காலம் மற்றும் தடைக்காலம் நிவாரணம் வழங்கும் பணியை முதலமைச்சர் ரங்கசாமி துவக்கி வைத்தார்.

மீனவர்களுக்கு ஆண்டு தோறும் மழைக்கால நிவாரணமாக குடும்பம் ஒன்றிற்கு ரூ.3,000 மீனவர் நலத்துறையின் மூலம் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டிற்கு முதற் கட்டமாக 19,302 குடும்பங்களுக்கு ரூ.5,79 கோடி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, ஆண்டு தோறும் மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் இந்த ஆண்டிற்கான மீன்பிடித் தடைக்கால நிவாரணம், முதற் கட்டமாக 18,779 குடும்பங்களுக்கு தலா ரூ. 6,500 வீதம் மொத்தம் ரூ. 12,20,63,500 கடந்த ஜூன் மாதம் அவரவர் வங்கி கணக்கில் செலுத்தப் பட்டது. இரண்டாம் கட்டமாக 523 குடும்பங்களுக்கு தலா ரூ.6,500 வீதம் மொத்தம் ரூ.33,99,500 வழங்கப்பட உள்ளது. இந்த மழைக்கால மற்றும் தடைக்கால நிவாரண தொகைகள் வழங்கும் பணியை மீன்வளத்துறை அமைச்சர் லட்சுமி நாராயணன் முன்னிலையில் முதலமைச் சர் ரங்கசாமி தொடங்கி வைத்தார். இந்த தொகை மீனவர்களின் வங்கி கணக் கில் செலுத்தப்பட உள்ளது. இந்நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ.,க்கள் பாஸ்கர், செந்தில்குமார், கல்யாண சுந்தரம் கலந்து கொண்டனர்.

# நாடார் சமுதாயத்தின் வரலாற்று விழிப்புணர்வு பிரச்சார விழா



**தென்காசி, நவ. 12**

தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் சார்பில் நாடார் சமுதாயத்தின் வரலாற்று விழிப்புணர்வு பிரச்சார விழா துரைச்சாமிபுரத்தில் நாட்டான்மை அருணாசலம் நாடார் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் பொதுச் செயலாளர் ஜான் டேவிட் பொருளாளர் சுப்பிரமணியன், மேற்கு மாவட்ட தலைவர் குருசாமி நாடார் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். இந்த நிகழ்ச்சியில் அகரக்கட்டு லூர்துநாடார் பேசும்போது ராவ் பகதூர் இரத்தினசாமி நாடார் அவர்கள் நாடார் மகாஜன சங்கத்தை தோற்றுவித்து அந்தந்த ஊரைச் சேர்ந்தவர்கள் அவர்களே ஒன்று கூடி பணத்தை சேமிக்கவும் அதைக்கொண்டு அந்தந்த ஊர் பிள்ளைகள் படிப்பதற்கு உதவி செய்ய வேண்டும் என்றும் நாம் சேமிக்கும் பணத்தைக் கொண்டு மக்கள் ஒன்று கூடுவதற்கு மண்டபங்கள் கோவில்கள் மிகப்பெரிய கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் நமக்கு நாமே ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக ஊரெங்கும் உறவின் முறைகளை உருவாக்கினார்கள் உறவின் முறைகளை வழிநடத்துவதற்கு நாடார் மகாஜன சங்கத்தை ஏற்படுத்தினார்கள் என்று பேசினார். மேலும் ஆபிரகாம் பண்டிதர் பட்டிவீரன்பட்டி சௌந்தர பாண்டியன் நாடார் சிலம்புச் செல்வர் மபொசி சங்கரலிங்கநாடார் ராஜா பலவேச முத்து நாடார் மார்சல் நேசமணி நாடார் தானுலிங்க நாடார் சிபா ஆதித்தனார் சிவந்தி ஆதித்தனார் போன்ற தலைவர்களை பற்றி பேசினார்கள். நம்முடைய சமுதாயத்தை சேர்ந்த தலைவர்கள் தேசத்திற்காகவும் தமிழ் நாட்டிற்காகவும் தமிழுக்காகவும் தமிழ் மக்களுக்காகவும் செய்த அனைத்து சேவைகளையும் பிறர் அறிந்து கொள்ளும் வகையில் எடுத்துச் சொல்ல வேண்டும். ஒவ்வொரு நபரும் நம்முடைய சமுதாயத்தின் சுய வரலாறுகளை தெரிந்து கொள்ள வேண்டும் என்று பேசினார். மேலும் நாடார் சமுதாய மக்கள் வாழுகின்ற அனைத்து ஊர்களிலும் இதுபோன்ற நாடார் சமுதாயத்தின் வரலாற்றுப் பிரச்சாரம் மேற்கொள்ளப் இருப்பதாக பேசினார். முடிவில் செல்வின் சமீத் நன்றி கூறினார். இந்த நிகழ்ச்சியில் சிவா நிவேந்தன் நாகராஜன் குமரேசன் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டார்கள்

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# முதலியார்பேட்டை தொகுதியில் இலவச அரிசி, சர்க்கரை வழங்கும் பணி சம்பத் எம்.எல்.ஏ., தொடங்கி வைத்தார்



**புதுச்சேரி, நவ. 12–**

புதுச்சேரி குடிமை பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை சார்பில் அனைத்து ரேஷன் கார்டுகளுக்கும் 10 கிலோ அரிசி, 2 கிலோ சர்க்கரை இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

முதலியார்பேட்டை தொகுதிக்குட்பட்ட தியாகு முதலியார் நகர் சமுதாய நல கூடத்திலும், விடுதலை நகர் பகுதியில் உள்ள நியாய விலை கடையிலும் முதலியார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் சம்பத், பொதுமக்களுக்கு இலவச அரிசி, சர்க்கரை வழங்கும் நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார். அப்பொழுது ஊர் பொதுமக்கள் உடன் இருந்தனர்.

# சாமானிய மக்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கில் புதுச்சேரிக்கு வந்துள்ளேன்

## கவர்னர் கைலாஷ்நாதன் பெருமிதம்



**புதுச்சேரி, நவ. 12–**

புதுச்சேரிக்கு சுற்றுலா வந்த காஷ்மீர் மாணவர்கள், கவர்னர் கைலாஷ்நாதனை சந்தித்து கலந்துரையாடினர்.

பாரத் தர்ஷன் சுற்றுலா திட்டத்தின் கீழ் புதுச்சேரி சுற்றுலா வந்துள்ள காஷ்மீர் பகுதியை சேர்ந்த 25 மாணவர்கள் கொண்ட குழுவினர் ரபிக் முகமது, பாலமுருகன் ஆகியோர் தலைமையில் ராஜ் நிவாஸில் கவர்னர் கைலாஷ்நாதனை சந்தித்து கலந்துரையாடினர். புதுச்சேரியின் சிறப்புகள், வரலாறு, பண்பாடுகளை பற்றி விளக்கினார். தொடர்ந்து, மாணவர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்தார்.

இந்த கலந்துரையாடலில் கவர்னர் கைலாஷ் நாதன் பேசியதாவது: நான் அதிகாரத்திற்கு ஆசைப்பட்டு இந்த பதவிக்கு வரவில்லை. நம்மால் முடிந்தவரை சாமானிய மக்களுக்கு உதவ வேண்டும் என்ற மனப்பான்மையோடு வந்திருக்கிறேன்.

நான் வசதியான குடும்பத்தில் பிறந்தவன் இல்லை. சாதாரண குடும்பத்தில் இருந்து வந்ததால், சாமானிய மக்களின் துன்பங்கள், பிரச்சனைகள், பசியை புரிந்து கொள்ள முடிந்தது.

நீங்கள் திறமைகளை வளர்த்துக்கொண்டு காஷ்மீரின் வளர்ச்சிக்கும், அதன் மூலமாக நாட்டின் வளர்ச்சிக்கும் பாடுபட வேண்டும். காஷ்மீரின் பழம் பெருமையை நிலை நாட்ட அனைவரும் ஒன்றுபட்டு அர்ப்பணிப்போடு செயல்பட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# புதுச்சேரி மண்ணையும், மக்களையும் நேசித்து பணியாற்றியதால் எனது அஸ்தியை புதுச்சேரியில் கரைக்க வேண்டும்

## முன்னாள் கவர்னர் கிரண்பேடி நெகிழ்ச்சி



**புதுச்சேரி, நவ. 12–**

புதுச்சேரி மண்ணையும், மக்களையும் நேசித்து பணியாற்றியதால், எனது அஸ்தியை புதுச்சேரியில் கரைக்க வேண்டும் என, முன்னாள் கவர்னர் கிரண்பேடி வேண்டுகோள் விடுத்தார்.

புதுச்சேரி முன்னாள் கவர்னர் கிரண்பேடி எழுதிய 'அச்சமற்ற ஆட்சி' என்ற நூலின் பிரெஞ்சு மொழிபெயர்ப்பு வெளியீட்டு விழா பல்கலைக்கழகத்தில் சமீபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் முன்னாள் கவர்னர் கிரண்பேடி பேசியதாவது:

'புதுச்சேரியில் நான் கவர்னராக பொறுப்பேற்ற போது முதல் காரியமாக மக்களுக்கான இலவச ஹெல்ப் லைன் அறிமுகப்படுத்தி, ஊழல் புகார்களை தைரியமாக கொடுக்க செய்யலாம் என்று சொன்னேன். அதை செய்ய அரசு செயலர்கள் தயக்கம் காட்டினர். ஆனால் அந்த ஹெல்ப் லைனை அறிமுகப்படுத்தி வைத்துவிட்டு தான் பதவியேற்பிலேயே கலந்து கொண்டேன்.

பதவி ஏற்ற நாளில் எனது பணி எப்படி இருக்கும் என்பதனை மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும் என, நினைத்தேன். அதுவும் நடைமுறை இல்லை என, தடுத்தனர். நான் ரப்பர் ஸ்டாம்ப் இல்லை. மக்களுக்கான கவர்னர் என்று சொல்லி உரையாற்றினேன்.

என்னுடைய பணியை மக்களுக்கு எடுத்து சொன்னேன். அதனால் தான், மக்களுக்கும் நம்பிக்கை பிறந்து தைரியமாக வந்து புகார் அளித்தனர். எந்த பணியாக இருந்தாலும் உங்களுடைய வேலைக்கு உண்மையாக இருக்க வேண்டும். எதற்கும் பயப்படக்கூடாது. தைரியமாக இருந்தால் ஊழல் ஒழிந்து விடும். புதுச்சேரியில் நான் பணியாற்றிய நாட்கள் உன்னதமானது. இந்த மண்ணையும், மக்களையும் நேசித்து பணியாற்றினேன். எந்த சூழ்நிலையில், எங்கு நான் இறந்தாலும் எனது பெரும்பாலான அஸ்தியை புதுச்சேரியில் தான் கரைக்க வேண்டும். இது எனது விருப்பமும், வேண்டுகோளும் ஆகும்.'

இவ்வாறு முன்னாள் கவர்னர் கிரண்பேடி நெகிழ்ச்சியுடன் பேசியது, அங்கு இருந்த சபையோர் அனைவரையும் நெகிழ வைத்தது.

# மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனடி நடவடிக்கை மாவட்ட ஆட்சியர் பழனி உத்தரவு



விழுப்புரம், நவ. 12-

விழுப்புரம் மக்கள் குறைதீர்க்கும் நாள் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் பழனி தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெற்று மனு தாரர்கள் முன்னிலையில் விசாரணை மேற்கொண்டு தொடர்புடைய அலுவலர்கள் மனுக்கள் மீது உடனடியாக கவனம் எடுத்து குறித்த காலத்திற்குள் தீர்வு வழங்கிட வேண்டும் மாவட்ட ஆட்சியர் பழனி அலுவலர்களுக்கு அதிரடி உத்தரவு பிறப்பித்தார்.

மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளிடமிருந்து சுமார் 444 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. அதில் முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, வீட்டுமனை பட்டா கோருதல், ஆதரவற்றோர் உதவித்தொகை, பட்டா மாறுதல், தொழில் தொடங்க கடனுதவி கோருதல், பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம், அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம், கலைஞரின் கனவு இல்லம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை நேரடியாக பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மனுக்கள் முதல்வரின் முகவரி மனுக்கள் மற்றும் அமைச்சர் பெருமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனடி தீர்வு காண வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டது. தொடர்ந்து, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், 08 பயனாளிகளுக்கு ரூ.3,79,957/ மதிப்பில் முதலமைச்சரின் இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் முதிர்வுத்தொகைக்கான வங்கி வரைவோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் பழனி வழங்கினார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் பரமேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) யோகஜோதி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) முகுந்தன் மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) சிவக்கொழுந்து, மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் நல அலுவலர் தமிழரசன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்

# புதியதாக கட்டப்பட்டுள்ள நீர்த்தேக்க தொட்டியை பயன்பாட்டிற்கு கொண்டு வர மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்த பொதுமக்கள்



விழுப்புரம், நவ. 12-

விழுப்புரம் மாவட்டம், ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியம், மேல்மாவிலங்கை ஊராட்சிக்குட்பட்ட கல்பாக்கம் கிராமத்தில் அருந்ததியர் குடியிருப்புப் பகுதியில் புதிதாக கட்டப் பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பயன்பாட்டுக்குக் கொண்டுவர நடவடிக்கை வேண்டி அப்பகுதி மக்கள் விழுப்புரம் மாவட்ட ஆட்சியருக்கு கோரிக்கை மனுஅளித்தனர்.

கல்பாக்கம் கிராமத்தில் உள்ள அருந்ததியினர் குடியிருப்பு பகுதி வாழ் மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் அங்குள்ள அரசுக்கு சொந்தமான இடத்தில் ஜல்ஜீவன்மி,ன் திட்டத்தின்கீழ் 10 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டப் பட்டுள்ளது.

இந்நிலையில் குடிநீர் தெட்டி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டஇடத்தில் கட்டப்பட்டுள்ளதாகவும், அந்தத்தொட்டியைஇடித்து அப்புறப்படுத்தவேண்டும் என ஒருஅமைப்பைச் சேர்ந்தசிலர் ஆட்சியர் மற்றும் ஒலக்ர் ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளுக்கு புகார் மனு அளித்துள்ளனர். குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி கட்டப் பட்டுள்ள இடம் எங்கள் சமூக மக்கள் பயன்படுத்தி இடம் என்பதால், அதனால் யாருக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை. எனவே புதிதாக கட்டப்பட்டுள்ள குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டியை உடனடியாக திறந்து மக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டும் என அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிராம மக்கள் மனு அளித்தபோது, மேல்மாவிலங்கை ஊராட்சித் தலைவர் செங்கேணி ஏழுமலை மற்றும் கிராம முக்கியஸ்தர்கள் உடனிருந்தனர்.

# மாணவர்களுக்கான கண் பரிசோதனை முகாம்



சேலம் மெஜஸ்டிக் அரிமா சங்கம் மற்றும் சுவாமி கல்வி நிறுவனம் இணைந்து நடத்தும் இரண்டாவது நாள் சேவைத் திட்டமாக மாணவர்களுக்கான கண் பரிசோதனை முகாம் சுவாமி பள்ளியில் நடைபெற்றது. இம்முகாமில் 800 மாணவர்கள் பங்கேற்றனர். இந்நிகழ்வினை சுவாமி கல்வி நிறுவன தலைவர் அரிமா சுவாமிநாதன் மிக சிறந்த முறையில் ஏற்பாடு செய்தார். மேலும் இந்த நிகழ்வில் சங்கத்தின், செயலர் நிர்வாகம் அரிமா விமல்ராஜ், முதல் உதவி தலைவர் அரிமா சீனிவாசன், அரிமா கோபி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம்



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

# பேவர் பிளாக் சாலை அமைக்க பூமி பூஜை



கயத்தாறு, நவ. 12-

கயத்தாறு பேரூராட்சி பகுதியில் 1,2,3, ஆகிய வார்டுகளில் மாநில நிதிப் பகிர்வு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் மூலம் ரூபாய் 91 லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை மற்றும் வார்கால் அமைக்கும் பணியை கயத்தாறு பேரூராட்சி மன்றத் தலைவர் சுப்புலட்சுமிஇராஜதுரை பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் திமுக கிழக்கு ஒன்றிய செயலாளர் சின்னப்பாண்டியன், மாவட்ட திட்ட குழு உறுப்பினர் அய்யாதுரை பாண்டியன், பேரூர் கழக செயலாளர் சுரேஷ் கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த நிகழ்ச்சியில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் இராஜதுரை, பேரூராட்சி மன்றத் கவுன்சிலர் கொம்பையாபாண்டியன், மற்றும் திமுக ஒன்றியபிரதி சங்கர், வார்டு செயலாளர்கள் மாடசாமி, ஆறுமுகவேல், தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் கார்த்திக் முன்னாள் பேரூராட்சி மன்ற கவுன்சிலர் ஜெயராஜ் மற்றும் அய்யாசாமி பாண்டியன், பூல்பாண்டியன் ,செல்வராஜ் ஓய்வு பெற்ற இராணுவ வீரர் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# நடப்பு நிதி ஆண்டிற்கான வங்கி கடன் திட்ட அறிக்கை வெளியீடு




ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன் ஜித் சிங் காலோன், நடப்பு நிதி ஆண்டிற்கான (2024-25) வங்கி கடன் திட்ட அறிக்கையினை வெளியிட்டார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) பிரதாப் சிங், இந்திய ரிசர்வ் வங்கி உதவி துணை பொதுமேலாளர் ஸ்ரீதர், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் கார்த்திகேயன், நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் அருண்குமார் மற்றும் ஐஓபி ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவன இயக்குனர் ராஜரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பகுதி நேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்




சேலம், நவ. 12-

சேலம் பகுதி நேர ஆசிரியர் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு சார்பில் கோட்டை மைதானத்தில் கவாஸ்கர் தலைமையில், ராமகேசவன், காதர் மொய்தீன் ஆகியோர் முன்னிலையில் பணி நிரந்தரம் செய்ய வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தில் பகுதி நேர ஆசிரியர்கள் முறையான நியமனத்தில் அரசு பள்ளி மாணவர்களின் பன்முக திறன்களை மேம்படுத்தும் பொருட்டு குறைவான ஊதியம் என்றாலும் அரசு பள்ளி மாணவர் நலன் கருதி பணியாற்றி வருகிறோம். எங்கள் குடும்ப வாழ்வாதாரத்திற்கு பணி நிரந்தர கோரிக்கை வைத்து வருகிறோம். எங்கள் வேதனை அறிந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் சட்டமன்ற தேர்தல் அறிக்கையில் பகுதி நேர ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார் கள் என்று அளித்த வாக்குறுதியை நிச்சயம் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையில் உள்ளோம் .கடந்த 13 ஆண்டாக பணி நிரந்தர கோரிக்கை நிறை வேறாமல் உள்ளமையால் 12000 திற்கும் மேற்பட்ட அரசு பள்ளி பகுதிநேர ஆசிரியர்களின் குடும்ப வாழ்வாதாரம் பாதிக்கப் பட்டுள்ளது. எனவே அரசின் கவனத்தை பெறும் வகையில் சேலம் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுக்க உள்ளோம். மேலும் கோரிக்கை நிறைவேறாமல் இருக்கும் பட்சத்தில் 12000 பகுதி நேர ஆசிரியர்களும் சென்னையில் கோட்டையில் முற்றுகை போராட்டம் செய்து அரசின் கவனத்தை பெற்று பணி நிரந்தர கோரிக்கைகளை நிறை வேற்றுவோம் என்று கோசங்கள் எழுப்பி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்தார்கள். இதில் பகுதி நேர ஆசிரியர் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பெத்துச்செட்டிப்பேட்டை அரசு தொடக்கப் பள்ளியில் இலவச பல் பரிசோதனை முகாம்



புதுச்சேரி, நவ. 12-

லாஸ்பேட்டை பெத்துச்செட்டிப் பேட்டையில் உள்ள அரசு தொடக்கப் பள்ளியில் ரோட்டரி கிளப் ஆப் பாண்டிச்சேரி எலைட்ஸ் சார்பாக இலவச பல் பரிசோதனை முகாம் நடைபெற்றது. ரோட்டரி கிளப்பின் தலைவர் சந்திரசேகரன் முயற்சியில் நடைபெற்ற இம்முகாமில் வட்டம் 1இன் பள்ளித் துணை ஆய்வாளர் குலசேகரன் முன்னிலை வகித்தார். மருத்துவர்.விஜய் குமார் தலைமையில் எவர் ஸ்மைல்ஸ் பல் மருத்துவமனை குழு சுமார் 320 மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்களுக்கு இலவசமாக பரிசோதனை செய்து வேண்டிய ஆலோசனைகளை வழங்கினர்.

ரோட்டரி கிளப்பின் செயலாளர் மோகன் ராஜ், பொருளாளர் பிரகாஷ் மற்றும் ரோட்டரி கிளப் உறுப்பினர்கள் குணசேகரன், சுந்தரவதனன், பாரதி, இராமலிங்கம், மற்றும் சருண்ராஜ் கலந்து கொண்டனர். முகாமிற்கான ஏற்பாடுகளைப் பள்ளித் தலைமை ஆசிரியை தமயந்தி ஜாக்குலின் தலைமையில் பள்ளித் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் செய்து இருந்தனர்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
● செவ்வாய் ● நவம்பர் 12, 2024
மாலை எக்ஸ்பிரஸ்

# வக்பு வாரிய திருத்த மசோதாவை எதிர்த்து ஆர்ப்பாட்டம்



**மதுரை, நவ. 12-**

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் மதுரை மாவட்டம் சார்பாக வக்பு வாரிய திருத்த மசோதாவை எதிர்த்து மக்கள் திரள் ஆர்ப்பாட்டம் மதுரை கிரைம் பிரான்ச் பகுதியில் மாவட்ட தலைவர் ஜாகிர் உசேன் தலைமையில் மாவட்ட செயலாளர் அசன் பாட்ஷா பொருளாளர் சையது ஆஷிக் துணை செயலாளர் ஹபிபுல்லா துணை செயலாளர்கள் கலீல் ரகுமான் ஜெய்னுல் ஆபிதீன் அம்ஜத்கான் சுல்தான் இமாம் சதாம் முன்னிலையில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில மேலாண்மை குழு தலைவர் சுலைமான் கலந்து கொண்டு வக்பு வாரிய திருத்தச்சட்டம் என்னும் பெயரில் இஸ்லாமியர்களுக்கு தர்மமாக வழங்கப்பட்ட நிலங்களை அபகரிக்கும் முயற்சியில் ஒன்றிய அரசாங்கம் ஈடுபட்டுள்ளது உள்ளிட்ட கண்டன கோஷங்களை எழுப்பி கண்டன உரையாற்றினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான இஸ்லாமிய மக்கள் கலந்து கொண்டனர்

## தமிழ்நாடு அரசின் சாதனைகள் குறித்த புகைப்படக் கண்காட்சி



திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம், சே.கூடலூர் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த விளக்க புகைப்பட கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

## தமிழக அரசின் சிறப்புத் திட்டங்கள் குறித்து புகைப்படக் கண்காட்சி



தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம் சத்திரப்பட்டி கிராமத்தில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் சிறப்புத் திட்டங்கள் குறித்து செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வைக்கப்பட்டிருந்த புகைப்படக்கண்காட்சியினை பொது மக்கள் பார்வையிட்டனர்.

## கலசலிங்கம் பல்கலையில் முதலாமாண்டு நர்சிங் வகுப்பு துவக்க விழா



**ஸ்ரீவில்லிபுத்தூர், நவ. 12-**

ஸ்ரீவில்லிபுத்தூர், கலசலிங்கம் பல்கலை, கலசலிங்கம் நர்சிங் கல்லூரியில் முதலாமாண்டு பி.எசி. நர்சிங் வகுப்புகள் துவக்க விழா பல்கலை வேந்தர் முனைவர் கே ஸ்ரீதரன் தலைமையில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் வி.கலா வரவேற்றார். துணைத் தலைவர் முனைவர் எஸ்.சசிஆனந்த், துணைவேந்தர் முனைவர் எஸ்.நாராயணன், பதிவாளர் முனைவர் வி.வாசுதேவன், வாழ்த்துரை வழங்கினர். மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். பேராசிரியை கே.நாகமுத்து நன்றி கூறினார்.

**தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்**

# கல்விக்கடன் குறித்த விழிப்புணர்வு ஆலோசனைக் கூட்டம்



சேலம் மாநகரப்பகுதிகளிலுள்ள மாணவ, மாணவிகளுக்கு கல்விக்கடன் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பாக மாமன்ற உறுப்பினர்களுக்கான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி தலைமையில் சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் ரஞ்ஜீத்சிங் ஆகியோர் முன்னிலையில் மாநகராட்சி கூட்டரங்கில் நடைபெற்றது. உடன் மாநகராட்சி துணை மேயர் சாரதா தேவி, மண்டலக்குழுத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வங்கியாளர்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

## வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம்



ஈரோடு மாவட்ட வாக்காளர் பட்டியல் பார்வையாளர்-தமிழ்நாடு உப்பு நிறுவன நிர்வாக இயக்குநர் Dr.C.N.மகேஸ்வரன், தலைமையில் ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர் - மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா முன்னிலையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தப் பணிகள் குறித்து, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் மரு.மனிஷ், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் சிவானந்தம் உட்பட பலர் உள்ளனர்.

## மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை ஆட்சியர் தொடங்கி வைத்தார்



திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கில், மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட அளவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன் தொடங்கி வைத்தார்கள்.

# மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம்



வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா. சுப்புலெட்சுமி பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் த.மாலதி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் நீ.செந்தில்குமரன், மகளிர் திட்ட இயக்குநர் உ. நாகராஜன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) கலியமூர்த்தி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) உமா, வேலூர் வருவாய் கோட்டாட்சியர் இரா. பாலசுப்பிரமணியன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007

# தமிழகம் நோக்கி நகர்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி



# மாநகராட்சி கட்டுப்பாட்டு மையத்தில் துணை முதல்வர் ஆய்வு

# மாணவிகளுக்கு பாலியல் தொல்லை: பள்ளி முதல்வர் கைது


# மாலை எக்ஸ்பிரஸ்



Email: maalaiexpresspdy@gmail.com



• 12-11-2024 செவ்வாய்க்கிழமை •வெளியூர்: 13-11-2024 புதன்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்